www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலர்ந்துவரும் ஸ்கொட்டிஸ் (Scottish) தேசத்திற்கும் தமிழீழ தேசத்திற்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கிய இராச்சியத்தின் (U.K) பல பாகங்களிலிருந்தும் தமிழீழ மக்கள், எதிர்வரும் 25 ஐப்பசி 97 அன்று ஸ்கொட்டிஸ் தேசத்தின் நகரங்களில் ஒன்றான எடின்பேர்க்கிற்கு (Edinburgh), ஒரு புரட்சிப் பயணத்தை மேற்கொள்கின்றார்கள்.

இதற்கு ஆதரவாக 600ற்கு மேற்பட்ட தமிழ் மக்கள், "தமிழீழ ஸ்கொட்லாந்து நட்புறவு புகையிரதம்" என்னும் தனிப்பட்ட வண்டியில், இலண்டனில் இருந்து எடின்பேர்க் நகரம் செல்ல ஒழுங்கு செய்துள்ளார்கள்.

இத்தினத்தில் பொதுநலவாய அரசுகளின் தலைவர்கள் ஒன்றுகூடும் நிகழ்வும் எடின்பேர்க் நகரில் இடம்பெறுகின்றது. இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் தமிழீழ மக்களை ஈவிரக்கமின்றி அடக்குமுறைக்கு உட்படுத்தி, அவர்கள் மீது அப்பட்டமான இனப்படுகொலையினை கட்டவிழ்த்து விட்டிருக்கும் சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும் கலந்து கொள்கின்றார். எடின்பேர்க் நகரம் சென்றடையும் மக்கள் அங்கு, சிங்கள இனவாத அரசு தமிழீழ மக்கள் மீது நடாத்திவரும் இனப்படுகொலையினை பொதுநலவாய அரசுகளின் தலைவர்கள் கவனத்திற்கும், ஸ்கொட்டிஸ் மக்கள் கவனத்திற்கும் கொண்டுவருவர்.

உருவாகிவரும் புதிய உலக அமைப்பில் மலர்ந்துவரும் இருவேறு அடையாளங்களைக் கொண்ட தேசங்களே தமிழீழமும் ஸ்கொட்லாந்தும் ஆகும். சர்வஜனவாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தி, அதில் வெற்றிகண்டிருக்கும் ஸ்கொட்டிஸ் மக்களிற்கு தமிழீழ மக்கள் தமது மனம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

**300 வருடங்களின் பின் ஸ்கொட்டிஸ் தேசம் தற்போது தனது நாடாளுமன்றத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.**

**ஸ்கொட்டிஸ் மக்களின் தனித்துவத்தை அமைக்க ஸ்கொட்டிஸ் மக்களின் முன்தான் வாக்கெடுப்பு வைக்கப்பட்டது. ஆனால் இலங்கையில் தமிழர் உரிமைக்கான வாக்கெடுப்பை சிங்கள இனவாதம் சிங்கள மக்களின் கைகளிலேயே விடுகிறது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.**

இன்று எவ்வாறு ஸ்கொட்டிஸ் மக்கள் 1997 இல் புதிய ஸ்கொட்லாண்டிற்காக வாக்களித்தனரோ, அவ்வாறே தமிழீழ தேசத்தினை மீளமைக்கும் விருப்பினை, 1977இல் தமிழீழ மக்கள் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்தினர். ஆயினும் 20 வருடங்கள் கடந்த பின்பும் தனது சுதந்திரத்தினை கொண்டாட முடியாத நிலையிலேயே தமிழீழ தேசம் உள்ளது. தமது தாய்நாட்டிற்கு செல்லமுடியாது வாழ்ந்துவரும் தமிழீழ மக்கள் எடின்பேர்க் சென்று ஸ்கொட்டிஸ் மக்களின் கொண்டாட்ட நிகழ்வுகளில் ஒன்றறக்கலந்து, விடுதலைப் பாதையினை நோக்கிடும் அவர்களுக்கு தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் நோக்கி முதற்கட்டமாக இப்பயணம் ஆரம்பமாகிறது.

இத்தினத்தில் எடின்பேர்க்கில் உள்ள Prince's Street இல் இடம்பெறும் தமிழீழ அடையாளத்தினை பிரதிபலிக்கும் தமிழ்க் கலாச்சார விழாவில் பாரிய அளவில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ தேசாபிமானிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரயாண ஒழுங்குகள், விபரங்களுக்கு உடனடியாக தமிழ் தொடர்பு சாதனப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பொதுநலவாயம் - 97இற்கான தமிழர் பேரவை,
C/O: U.T.O, Eelam House, 202 Long Lane, London SE1 4QB.
*தொ.பே.இல — 0171 403 4554*

ஒன்றிணைந்து நடாத்தும் அமைப்புக்கள்: **International Federation of Tamils, Tamil Lawyers Association(UK), Medical Institute of Tamils, International Tamil Foundation, Tamil Concern, Bolton Tamil Association, Federation of Tamil Associations(UK), Tamil Action Committee and Scotland Tamils.**